**கற்றல் ஊக்கி - 04**

பாடம் :- வரலாறு

தரம் :- 11

**அறிவுறுத்தல்கள்**

- வினாக்களைப் பகுதியாகவோ முழுமையாகவோ கற்பித்தலின்போதோ அல்லது அலகு முடிவிலோ வசதிக்கேற்ப பயன்படுத்தலாம்.
- தேர்ச்சி அடிப்படையிலான விளக்கமளிப்பதற்கும் கணிப்பீட்டிற்கும் இது பயன்படுத்தப்படலாம்.

| பெயர் | |
|---|---|

**Aaruthal** Sri Lanka

**2017 - தவணை - 02**

| பரீட்சையாளரின் பாவனைக்கு | | | | | |
|---|---|---|---|---|---|
| பகுதி | A | B | | | |
| வினா எண் | 1 | 1 | 2 | 3 | மொத்தப் புள்ளி |
| ஒதுக்கப்பட்ட புள்ளி | 10 | 04 | 18 | 18 | 50 |
| பெற்ற புள்ளி | | | | | |

**அலகு - 04**

**பகுதி - A**

- **பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

01) இலங்கையில் அரசியல் சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தியவர்கள்
(1) பிரான்சியர் (2) ஒல்லாந்தர்
(3) பிரித்தானியர் (4) போர்த்துக்கேயர்

02) ஆளுநரின் அதிகாரங்களைக் குறைப்பதற்காக கோல்புறூக்கினால் முன்வைக்கப்பட்ட சீர்திருத்தம்
(1) சட்டவாக்கக் கழகம், சட்ட நிருவாகக் கழகம் அமைக்கப்படல்
(2) மாகாணங்கள் ஐந்தாகப் பிரிக்கப்படல்
(3) வர்த்தக ஏகபோக உரிமை நீக்கப்படல்
(4) கட்டாய இராசகாரிய முறை நீக்கப்படல்

03) இலங்கை மக்களுக்கு சர்வஜன வாக்குரிமையை வழங்கிய அரசியல் சீர்திருத்தம்
(1) மனிங் அரசியல் யாப்புச் சீர்திருத்தம்
(2) கோல்புறூக் அரசியல் யாப்புச் சீர்திருத்தம்
(3) சோல்பரி அரசியல் யாப்புச் சீர்திருத்தம்
(4) டொனமூர் அரசியல் யாப்புச் சீர்திருத்தம்

04) இலங்கை சுதந்திரம் கோரி மேற்கொண்ட போராட்டங்களுக்கு பிரசார முறையாக இடதுசாரித் தலைவர்கள் பயன்படுத்தியது
(1) சூரியமல் இயக்கம்
(2) பொப்பி மலர் இயக்கம்
(3) இலங்கை தேசிய சங்கம்
(4) அரசுக் கழகம்

05) இலங்கைக்கு பாராளுமன்ற ஆட்சிமுறையை பரிந்துரைத்த அரசியல் சீர்திருத்தம்
(1) சோல்பரி அரசியல் யாப்புச் சீர்திருத்தம்
(2) டொனமூர் அரசியல் யாப்புச் சீர்திருத்தம்
(3) மக்கலம் அரசியல் யாப்புச் சீர்திருத்தம்
(4) மனிங் அரசியல் யாப்புச் சீர்திருத்தம்

06) சூரியமல் இயக்கத்தின் ஊடாக சுதந்திரத்திற்காக செயற்பட்ட இடதுசாரித் தலைவர்
(1) டி. பீ. ஜயதிலக
(2) கொல்வின் R.D. சில்வா
(3) D.S. சேனாநாயக்க
(4) சேர். பொன். இராமநாதன்

 Copyright © Aaruthal 2017 

07) 1915 இல் இலங்கையில் ஏற்பட்ட சிங்கள - முஸ்லிம் கலவரத்தின் பின்னர் உருவாக்கப்பட்ட பலம் வாய்ந்த அமைப்பு
(1) இலங்கை தேசிய சங்கம்
(2) பொப்பி மலர் இயக்கம்
(3) சூரியமல் இயக்கம்
(4) மது ஒழிப்பு இயக்கம்

08) நாட்டில் சுதந்திரமான கல்வி முறை, விவசாயக் குடியேற்றத் திட்டங்கள் போன்ற பொதுமக்கள் சார்ந்த விடயங்கள் செயற்படுத்த காரணமாக அமைந்த சீர்திருத்தம்
(1) கோல்புறூக் அரசியல் சீர்திருத்தம்
(2) டொனமூர் அரசியல் சீர்திருத்தம்
(3) மனிங் அரசியல் சீர்திருத்தம்
(4) மக்கலம் அரசியல் சீர்திருத்தம்

**✱ "A" நிரலுடன் "B" நிரலைத் தொடர்புபடுத்தினால் வரும் விடையைத் தெரிவு செய்க.**

09)

| "A" நிரல் | "B" நிரல் |
|---|---|
| 1) கோல்புறூக் | A - கி. பி. 1947 |
| 2) மனிங் | B - கி. பி. 1931 |
| 3) டொனமூர் | C - கி. பி. 1833 |
| 4) சோல்பரி | D - கி. பி. 1920 |

(1) ABCD (2) CDBA (3) CABD (4) ACBD

10)

| "A" நிரல் | "B" நிரல் |
|---|---|
| 1) கோல்புறூக் | A - அரசுக் கழகம் |
| 2) மக்கலம் | B - பாராளுமன்றம் |
| 3) டொனமூர் | C - வரையறுக்கப்பட்ட வாக்குரிமை |
| 4) சோல்பரி | D - சட்டவாக்கக் கழகம் |

(1) ABCD (2) CDBA (3) CABD (4) ACBD

(10 புள்ளிகள்)

## பகுதி - B

**01) பின்வரும் கூற்றுக்களுடன் தொடர்புபட்டவர்களை எழுதுக.**

i) சுதந்திர இலங்கையின் முதற் பிரதமர்

.............................................................................................................................

ii) டொனமூர் யாப்பின் அரசுக்கழகத்தில் கல்வி அமைச்சராக நியமிக்கப்பட்டவர்

.............................................................................................................................

iii) கி. பி. 1912 ஆம் ஆண்டு நடைபெற்ற முதலாவது தேர்தலின் மூலம் கல்வி கற்ற இலங்கையராகத் தெரிவு செய்யப்பட்டவர்

.............................................................................................................................

iv) இலங்கை தேசிய சங்கத்தின் முதற் தலைவர்

.............................................................................................................................

(4 புள்ளி)

 Copyright © Aaruthal 2017 

02) i) பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட அரசியல் சீர்திருத்தங்கள் மூன்று எழுதுக.

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

(3 புள்ளி)

ii) கோல்புறூக்கினால் பிரிக்கப்பட்ட மாகாணப் பிரிவுகளில் நான்கு எழுதுக.

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

(4 புள்ளி)

iii) கோல்புறூக் சீர்திருத்தத்தின் பிரதான அம்சங்கள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக.

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

(5 புள்ளி)

iv) குறூ-மக்கல சீர்திருத்தத்தின் அம்சங்கள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக.

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

(6 புள்ளி)

03) i) டொனமூர் அரசுக் கழகத்தில் நியமிக்கப்பட்ட அரச உத்தியோகத்தர்களையும் எழுதுக.

.........................................................................................................................................

.........................................................................................................................................

.........................................................................................................................................

(3 புள்ளி).

ii) டொனமூர் யாப்பில் நிர்வாகக் குழுக்களுக்கு வழங்கப்பட்ட பொறுப்புக்கள் நான்கு எழுதுக.

.........................................................................................................................................

.........................................................................................................................................

.........................................................................................................................................

.........................................................................................................................................

(4 புள்ளி)

iii) டொனமூர் யாப்பின் அம்சங்கள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக.

.........................................................................................................................................

.........................................................................................................................................

.........................................................................................................................................

.........................................................................................................................................

.........................................................................................................................................

.........................................................................................................................................

.........................................................................................................................................

.........................................................................................................................................

(5 புள்ளி)

iv) சோல்பரி யாப்பின் பிரதான அம்சங்கள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக.

.........................................................................................................................................

.........................................................................................................................................

.........................................................................................................................................

.........................................................................................................................................

.........................................................................................................................................

.........................................................................................................................................

.........................................................................................................................................

.........................................................................................................................................

.........................................................................................................................................

.........................................................................................................................................

(6 புள்ளி)

 Copyright © Aaruthal 2017 

## தகவல் பத்திரம்

### பிரித்தானியரின் ஆட்சியில் இலங்கையின் அரசியல் மாற்றங்கள்

❖ பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட அரசியல் சீர்திருத்தங்கள்

- ➢ கோல்புறூக் சீர்திருத்தம் - கி. பி. 1833
- ➢ குறூ-மக்கலம் அரசியல் சீர்திருத்தம் - கி. பி. 1910 - 1912
- ➢ மனிங் அரசியல் சீர்திருத்தம் - கி. பி. 1920
- ➢ மனிங் டிவன்சயர் யாப்புச் சீர்திருத்தம் - கி. பி. 1924
- ➢ டொனமூர் யாப்புச் சீர்திருத்தம் - கி. பி. 1931
- ➢ சோல்பரி யாப்புச் சீர்திருத்தம் - கி. பி. 1947

❖ அரசியல் சீர்திருத்தங்களின் அம்சங்கள்

**கோல்புறூக்**
- ✶ சட்டவாக்கக் கழகம், சட்ட நிர்வாகக் கழகம் அமைக்கப் பட்டமை.
- ✶ மலைநாடும் கரையோரப் பிரதேசங்களும் ஒரே ஆட்சி முறையின் கீழ் கொண்டு வரப்பட்டமை.
- ✶ நாடு ஐந்து மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டமை.
- ✶ அரசின் வர்த்தக ஏகபோகமுறை நீக்கப்பட்டமை

**குறுமக்கலம்**
- ✶ சட்டவாக்கக் கழகத்திற்கு முதன் முறையாக வாக்குரிமை மூலம் பிரதிநிதிகள் தெரிவு செய்யப் பட்டமை (வரையறுக்கப் பட்ட வாக்குரிமை)
- ✶ இலங்கையருக்காக கல்வி கற்ற பிரதிநிதி ஒருவர் தெரிவு செய்யப்பட்டமை
- ✶ தொடர்ந்தும் உத்தியோக சார்பற்றோரே பெரும்பான்மை யோராய் இருந்தமை

**மனிங்**
- ✶ சட்டவாக்கக் கழகத்தில் முதன்முறையாக உத்தியோக சார்பற்றோர் பெரும்பான்மை பெற்றமை
- ✶ பிரதேசவாரிப் பிரதிநிதித்துவ முறை அறிமுகமானவை
- ✶ இனவாரிப் பிரதிநிதித்துவம் தொடர்ந்தும் காணப்பட்டமை.

**மனிங் டிவன்சயர்**
- ✶ சட்டவாக்கக் கழக உறுப்பினர்களுள் 50% க்கு மேற்பட்டோர் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்டமை
- ✶ சட்டவாக்கக் கழகத்திற்கு உத்தியோக சார்பற்ற உறுப்பினர் மூவர் நியமிக்கப்பட்டமை.

**டொனமூர்**
- ✶ சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட்டமை
- ✶ அரசுக் கழகம் அமைக்கப்பட்டமை
- ✶ நிருவாகக் குழுமுறைமை ஆரம்பிக்கப்பட்டமை
- ✶ பிரதேசவாரிப் பிரதிநிதித்துவம் விரிவாக்கப்பட்டமை


Copyright © Aaruthal 2017

சோல்பரி

- ✱ ஆளுநர் நாயகம் பதவி ஏற்படுத்தப்பட்டமை
- ✱ இரு சபைகளைக் கொண்ட பாராளுமன்றம் அமைக்கப்பட்டமை
- ✱ பிரதமர் தலைமையிலான அமைச்சரவை
- ✱ அரசசேவை ஆணைக்குழுவும் நீதிச் சேவை ஆணைக்குழுவும் அமைக்கப்பட்டமை.

## ❖ சூரியமல் இயக்கம் :

- ➢ பொப்பி மலர் இயக்கத்திற்கு எதிராக ஆரம்பிக்கப்பட்டது.
- ➢ இடதுசாரித் தலைவர்கள் ஈடுபட்டனர் (கலாநிதி *M.N.* பெரேரா, கலாநிதி கெல்வின் *R.D.* சில்வா)
- ➢ கிடைத்த பணம் இந்நாட்டு ஏழை மக்களுக்குப் பயன்படுத்தப்படல்.
- ➢ சூரியகாந்தி மலர் சுதந்திரத்தின் சின்னம் என பிரசாரத்தில் கூறப்பட்டது.

## ❖ பொப்பி மலர் இயக்கம் :

- ➢ முதலாம் உலகப்போரில் அங்கவீனமடைந்த பிரித்தானியப் படைக்கு உதவி வழங்குவதற்காக ஆரம்பிக்கப்பட்டது.
- ➢ நவம்பர் பதினோராம் திகதி உலக சமாதான தினமாகப் பிரகடனப்படுத்தி அன்று விற்ற பொப்பி மலரின் வருமானம் பிரித்தானியாிற்கு அனுப்பப்பட்டது.


Copyright © Aaruthal 2017

**கற்றல் ஊக்கி - 05**

பாடம் :- **வரலாறு**

தரம் :- **11**

**அறிவுறுத்தல்கள்**

- ❖ வினாக்களைப் பகுதியாகவோ முழுமையாகவோ கற்பித்தலின்போதோ அல்லது அலகு முடிவிலோ வசதிக்கேற்ப பயன்படுத்தலாம்.
- ❖ தேர்ச்சி அடிப்படையிலான விளக்கமளிப்பதற்கும் கணிப்பீட்டிற்கும் இது பயன்படுத்தப்படலாம்.

| பெயர் | |
|---|---|

**Aaruthal** Sri Lanka

**2017 - தவணை - 02**

| பரீட்சையாளரின் பாவனைக்கு | | | | |
|---|---|---|---|---|
| பகுதி | A | B | | |
| வினா எண் | 1 | 1 | 2 | மொத்தப் புள்ளி |
| ஒதுக்கப்பட்ட புள்ளி | 10 | 12 | 18 | 40 |
| பெற்ற புள்ளி | | | | |

அலகு - 05

## பகுதி - A

❖ **பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

01) இலங்கையில் பொருளாதார மாற்றங்கள் ஏற்படக் காரணமான சீர்திருத்தம்
(1) டொனமூர் அரசியல் யாப்புச் சீர்திருத்தம்
(2) கோல்புறூக் அரசியல் யாப்புச் சீர்திருத்தம்
(3) மக்கலம் அரசியல் யாப்புச் சீர்திருத்தம்
(4) மனிங் அரசியல் யாப்புச் சீர்திருத்தம்

02) ஜேம்ஸ்டெயிலரால் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட பெருந்தோட்டப் பயிர்
(1) தேயிலை (2) றப்பர்
(3) தென்னை (4) தெங்கு

03) "குயினைன்" என்னும் மருந்து தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட பயிர்
(1) கோப்பி (2) றப்பர்
(3) தேயிலை (4) சிங்கோனா

04) தென்னை பயிரிடப்பட்ட பிரதான பிரதேசங்கள்
(1) குருனாகல், சிலாபம், புத்தளம்
(2) சிலாபம், கண்டி, நுவரெலியா
(3) மாத்தளை, கண்டி, நுவரெலியா
(4) சிலாபம், காலி, கண்டி

05) மோட்டார் வாகன கைத்தொழிலால் இலங்கையில் வளர்ச்சியடைந்த பயிர்ச்செய்கை
(1) கோப்பி (2) தேயிலை
(3) இறப்பர் (4) சிங்கோனா

($5 \times 2 = 10$ புள்ளிகள்)


## பகுதி - B

01) **பின்வரும் இடங்களை இலங்கைப்படத்தில் குறித்துப் பெயரிடுக.**

கண்டி காலி அகலவத்தை கொழும்பு கம்பஹா மாத்தளை
இரத்தினபுரி குருனாகல் புத்தளம் அம்பாந்தோட்டை கேகாலை

(12 புள்ளி)

 Copyright © Aaruthal 2017 


N

02) i) பிரித்தானியர் ஆட்சியால் இலங்கையில் வளர்ச்சியடைந்த பெருந்தோட்டப் பயிர்கள் மூன்று எழுதுக.

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

(3 புள்ளி)

ii) தேயிலைப் பயிர்ச்செய்கையின் வளர்ச்சிக்கு உதவிய காரணிகள் இரண்டினை எழுதுக.

.................................................................................................................................

.................................................................................................................................

(4 புள்ளி)

iii) இறப்பர் பயிர்ச்செய்கையின் வளர்ச்சிக்கு ஏதுவான காரணிகள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக.

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

(5 புள்ளி)

iv) பிரித்தானியர் ஆட்சியால் இலங்கையில் ஏற்பட்ட தீய விளைவுகள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக.

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

(6 புள்ளி)

## தகவல் பத்திரம்

### பிரித்தானியரின் கீழ் இலங்கையில் சமூக மாற்றங்கள்

❖ * பிரித்தானியர் ஆட்சியால் இலங்கையில் சமூக பொருளாதார, கலாசார முறைகளில் மாற்றம் ஏற்பட்டது.
  * பிரித்தானியர் இலங்கையைக் கைப்பற்றிய போது சுயதேவைப் பூர்த்தியான கிராமியப் பொருளாதார முறை காணப்பட்டது.
  * கோல்புறூக் ஆணைக்குழுவின் பொருளாதாரச் சீர்திருத்தங்களினால் ஏற்றுமதி இறக்குமதிப் பொருளாதாரமாக மாற்றம் அடைந்தது.

❖ பெருந்தோட்டத் துறையின் விருத்தி
  * கோப்பிப் பயிர்ச்செய்கை வளர்ச்சியடைந்தமை.

  **செல்வாக்குச் செலுத்திய காரணிகள்**
    ➢ ஐரோப்பிய சந்தையில் கோப்பிக்கான கேள்வி அதிகரித்தமை.
    ➢ வெளிநாட்டு முதலீட்டாளர்கள் அதிகளவில் கோப்பித் தோட்டங்களில் முதலீடு செய்தமை
    ➢ கோப்பிப் பயிர்ச்செய்கை மூலம் அதிக லாபம் பெற முடிந்தமை
  * கி. பி. 1869 ஆம் ஆண்டு கோப்பிப் பயிர்செய்கை ஏற்பட்ட “ஹெமீலியாவெஸ்டாக்ஸ்” என்னும் இலை வெளிறல் நோயால் கோப்பிப் பயிர்ச் செய்கை வீழ்ச்சியடைந்தது.
  * கோப்பிப் பயிர்ச்செய்கைக்குப் பின் சிங்கோனா பயிரிடப்பட்டது. (குயினைன் என்னும் மருந்துக்குரிய மூலிகை)
  * ஜேம்ஸ் டெயிலர் என்பவர் “லூல்கந்துர” என்னும் இடத்தில் தேயிலைப் பயிர்ச்செய்கையை ஆரம்பித்தார்.

  **தேயிலைப் பயிர்ச்செய்கைக்கு உதவிய காரணிகள்**
    ➢ இலங்கையின் மலைப் பிரதேசம் தேயிலைச் செய்கைக்கு உகந்ததாகக் காணப்பட்டமை.
    ➢ இலங்கைத் தேயிலைக்கு உலக சந்தையில் கேள்வி அதிகரித்தமை.
    ➢ போக்குவரத்து வசதிகள் முன்னேற்றம் அடைந்தமை.
  * பிரித்தானியர் காலத்தில் நுகர்வுப் பயிராகக் காணப்பட்ட தெங்கு பெருந்தோட்டங்களில் பயிரிடப்பட்டு ஏற்றுமதி செய்யப்பட்டது.
  * ஹென்றிவிக்கெம்மி என்பவரால் றப்பர் பயிர்ச்செய்கை ஆரம்பிக்கப்பட்டது.

  **உதவிய காரணிகள்**
    ➢ மோட்டார் வாகனத் தொழில் வளர்ச்சியடைந்தமை.
    ➢ பொருத்தமான தொழில்நுட்ப முறைகள் பயன்படுத்தப்பட்டமை.
    ➢ உலகில் இறப்பருக்கான கேள்வி அதிகரித்தமை
  * பிரித்தானியர் ஆட்சியால் இலங்கையில் சமூக மாற்றங்கள் ஏற்பட்டது.
    ➢ மத்தியதர வகுப்பினரின் தோற்றம்
    ➢ தொழிலாளர் வகுப்பினரின் தோற்றம்
  * பிரித்தானியர் ஆட்சியால் இலங்கையில் ஏற்பட்ட விளைவுகள்

  **நன்மையானது**
    ➢ சர்வதேச மொழியான ஆங்கில மொழி பரவியமை.
    ➢ போக்குவரத்து மற்றும் தொடர்பாடல் துறை வளர்ச்சியடைந்தமை.
    ➢ ஏற்றுமதிக்கான பெருந்தோட்டப் பயிர்களை அறிமுகம் செய்தமை.
    ➢ பாராளுமன்ற ஆட்சிமுறை அறிமுகப்படுத்தப்பட்டமை.

  **தீமையானது**
    ➢ உள்நாட்டு கலாசாரம், பாரம்பரியம் சீரழிவுக்கு உட்பட்டமை.
    ➢ காணி உரிமையற்ற மக்கள் கூட்டம் உருவானமை.
    ➢ மதுபாவனை நாடெங்கும் பரவியமை.


Copyright © Aaruthal 2017